**உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் - 2023**
**-------------------------------------------------------------**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடனான தொடர்புடன் கூடிய இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1.5.1.1 | நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய நிதி அமைச்சின் 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் நிதியங்களின் இறுதி கணக்குகள் தயாரித்தல் தொடர்பான வழிக்காட்டிகள் கீழும், நிதியமொன்றின் நிதிக் கூற்றில் பங்கு மாற்றல்/ நிகர சொத்துக்கள் தொடர்பான கூற்று உள்ளடக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றின் கீழான பிரதான உறுப்படியொன்றான நிகர சொத்து/ பங்கு மாற்றல்கள் கூற்று விரிவான குறிப்பின் கீழ் உப பிரிவொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தமையினால் நிதிக் கூற்றுக்கள் தொகுப்பொன்று காணப்பட வேண்டிய மாதிரி சட்டகம் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் குறித்த மாதிரியின் பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கபட வேண்டும். |
| 1.5.1.2 | உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தினை போன்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட | காசு அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் உள்நாட்டு இறைவரி | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | கோட்பாடுகளையும் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதென நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளமையினால் நிதியம் குறிப்பாக நிதி அறிக்கையிடல் கட்டமைப்பினை வெளிப்படுத்தியிருக்கவில்லை. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் அட்டுறு கணக்கீட்டு அடிப்படை பயன்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் ஊக்குவிப்பு நிதியத்தின் கணக்கு தயாரிக்கப்படும் போது நியமம் 01 இன் 131 பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு அடிப்படை மீளாய்வாண்டின் இறுதி நிதிக் கூற்றினுள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஊக்குவிப்பு இறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டது மற்றும் வரும் ஆண்டு தொடக்கம் இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் இறுதி நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டு அடிப்படை குறிப்பிடுவதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது, | நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கபட வேண்டும். |
| 1.5.1.3 | 2020 ஆகஸ்ட் 28 திகதிய நிதி அமைச்சின் 01/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் நி.பி 877 (2) நிதியத்தின் கணக்கு வைத்தல், நிதிக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் போன்ற உப பிரிவுகளின் கீழ் நிதியத்திற்காக சட்டரீதியான ஏற்பாடுகள் பிரகாரம் பெறப்படுகின்ற அதிகாரம் அல்லது நிதி பிரமாணம் ஏற்பாடுகளின் கீழ் பெறப்படுகின்ற அதிகாரமன்று நிதியத்தின் எந்தவொரு செலவீனமும் ஏற்கப்படக் கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் கணக்கு தயாரிக்கப்படும் போது அறிக்கையயிடல் அடிப்படையினுள் நிதியத்தின் செலவீனம் ஏற்பதற்காக அதிகாரம் பெறப்படும் சட்டரீதியான ஏற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 150 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் வெளியிடப்பட்ட தகவல்களில் ஏனைய இடத்தில் வெளிப்படுத்தப்படாதிருப்பின் உறுப்படியினால் வெளிப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது<br><br>அ) உறுப்படியின் நித்திய அமைவிடம் மற்றும் சட்டரீதியான தன்மை மற்றும் அது செயல்படும் வலயம்<br><br>ஆ) உறுப்படியின் செயற்பாடு கட்டுப்படுத்துவதற்குரிய சட்டம் தொடர்பான குறிப்பரை<br><br>போன்ற தகவல்கள் நிதிக் கூற்றுக்கள் பயன்படுத்துவோர்கள் அறிந்துக் கொள்வதற்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்படுகின்றது. | உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் செலவீனம் ஏற்பதற்குரிய அங்கீகாரம் நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF1/02/17/IRD/25-Est. ஆம் இலக்க மற்றும் 2023 சனவரி 16 திகதிய கடிதத்தின் ஊடாக பெறப்பட்டுள்ளது மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் செலவீன மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்ட எல்லையினுள் திருத்தப்படுவதற்கு MF1/02/17/IRD/25-Est. ஆம் இலக்க மற்றும் 2023 யூன் 14 திகதிய கடிதத்தின் ஊடாக அங்கீகாரம் பெறப்பட்டது எனவும் 2023 ஆம் ஆண்டின் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்துவதற்குரிய நடவடிக்கைகள் ஊக்குவிப்பு குழு என்ற பெயரிலான விசேட குழு ஊடாக மேற்கொள்ளப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தொடர்புடைய தகவல்கள் கணக்கினுள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு சட்டத்தின் சட்டத்தின் 99 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் இறைவரி ஊக்குவிப்பு நிதியம் தாபிக்கப்பட வேண்டிய போதிலும், இதுவரையில் இந் நிதியம் பிரயோக ரீதியில் தாபிக்கப்பட்டிராமையினால் மற்றும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி 41,440,057 ஆன வீட்டுக் கடன் வைப்பு இறைவரி பணிப்பாளர் நாயகத்தின் பேணிச் செல்லப்பட்டிருந்தமையின் அடிப்படையில், மேற்படி வைப்பின் மொத்த வட்டி வருமானத்தின் அடிப்படையில் வங்கியினால் குறைக்கப்பட்ட ரூபா 60,314 ஆனநிறுத்திற் வைத்தற் வரித் தொகை பெற வேண்டிய நிறுத்தி வைத்தற் வரி வருமானமாக கணக்கிடப்படுவதற்கு திணைக்களத்திற்கு ரித்து இல்லாமையின் காரணத்தினால் நிதியத்தின் வட்டி வருமானம் அத் தொகையினால் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்கு தொடர்புடையதாக பேணப்பட்ட வைப்பிற்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 1,363,058 ஆன மொத்த வட்டி வருமானம் பெறப்பட்டுள்ளது எனவும் அவ் வரி வருமானத்தின் மீது 5% நிறுத்தி வைத்தற் வரி அறவிடப்பட்டுள்ளதுடன் 2017 இன் 24 ஆம் இலக்க இறைவரி ஊக்குவிப்பு நிதியம் தாபிக்கப்பட வேண்டிய போதிலும், இதுவரையில் நிதியம் பிரயோக ரீதியில் தாபிக்கப்படவில்லை. | நிதியம் தாபிக்கப்பட்டு வைப்பு நிதியத்தின் பெயரில் பேணப்பட வேண்யதுடன் அதில் பெறப்படுகின்ற வட்டி வருமானத்தின் மீதான வரிக் பொறுப்புக்கள் தொடர்பாக 2017 இன் 24 ஆம் இலக்க இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | கணக்கு ஆண்டு முடிடைந்து 02 மாதங்களுக்குள் நிதியம் தொடர்பாக சான்றுப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வளாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 01/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டு நிதி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,999,390 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,060,958 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,061,568 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஊக்குவிப்பு செலவீனம் 54,300,863 இனாலும், செலவீனம் உயர்வடைந்தமையினால் தேநீருக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டமையினால் கடந்த ஆண்டிற்கு இணையாக தேநீருக்கான செலவீனம் 103.12 சதவீததினால் அதாவது 18,701,778 இனால் உயர்வடைந்தமையும் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.1.1 | இறைவரி சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்காக வீட்டுக் கடன் வழங்கும் நோக்கில் ரூபா 2,500,000 ஆன ஆரம்ப வைப்பில் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த வீட்டு கடன் நிதியத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 41,440,057 ஆக காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு ரூபா 14,100,000 ஆன கடன் பெறறுக் கொடுக்கப்பட்டிருந்த 15 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 4,716,605 ஆன தொகை தொடர்ந்தும் அறவிடப்படவுள்ளது. இறுதியாக உத்தியோகத்தரொருவருக்கு கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது 2011 திசெம்பர் 05 ஆந் திகதி ஆவதுடன் அத் திகதியிலிருந்து 12 ஆண்டிற்கு மேற்பட்ட காலம் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்காக திறைச்சேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பணத்தொகை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு வீட்டு கடன் நிதியமொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், இறைவரி சேவையின் நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு சொத்து ஈடு வைத்தலின் அடிப்படையில் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதென மற்றும் பெற்றுக் கொடுக்கப்பட்ட உயர்ந்தபட்ச கடன் தொகை ரூபா 1,000,000 ஆவதுடன் அக் கடன் தொகைக்காக 2011 ஆம் ஆண்டின் பின்னர் உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் விண்ணப்பம் பெறப்பட்டிருக்கவில்லை. | கடன் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 3.1.2 | இறைவரித் திணைக்களம் மற்றும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ரூபா 1,000,000 ஆன உயர்ந்தபட்ச கடன் தொகை பெற்றுக் கொள்வதற்கு இயலுமை காணப்படுவது விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரிக்கு அல்லது வாழ்க்கைதுணைக்கு அல்லது | இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்காக திறைச்சேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பணத்தொகை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு வீட்டு கடன் நிதியமொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், | கடன் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சார்ந்திருக்கும் பிள்ளைகளுக்கு காணியொன்று அல்லது வீடொன்று காணப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே. அவ்வாறே இந்த கடன் தொகை பெற்றுக் கொண்டதில் அரச சொத்து கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழான சொத்துக்கள் கடன் விண்ணப்பிப்பதற்கு உள்ள சந்தர்ப்பம் இழக்கப்படுகின்றமையினால் மிகவும் கவர்ச்சியான கடன் முன்மொழிவுத் திட்டத்திற்கு உத்தியோகத்தர்கள் நாடுகின்றமையினால் கடந்த சில ஆண்டுகள் முழுவதுமாக இந்த கடன் முன்மொழிவுத் திட்டத்தில் வீட்டுக் கடன் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டிராததுடன் 1989 ஏப்ரல் 10 ஆந் திகதி திணைக்களத்தினால் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்தப்படுவதற்கான தேவைப்பாடு குறித்து அதிகாரிகளின் கவனம் செலுத்தப்படல் வேண்டியிருந்தது. | இறைவரி சேவையின் நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு சொத்து ஈடு வைத்தலின் அடிப்படையில் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதென மற்றும் பெற்றுக் கொடுக்கப்பட்ட உயர்ந்தபட்ச கடன் தொகை ரூபா 1,000,000 ஆவதுடன் அக் கடன் தொகைக்காக 2011 ஆம் ஆண்டின் பின்னர் உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் விண்ணப்பம் பெறப்பட்டிருக்கவில்லை. | |
| 3.1.3 | இறைவரி வீட்டுக் கடன் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி அதன் மொத்த சொத்துக்களின் 16 சதவீதத்திற்கு அண்ணவளான பெறுமதியிலான கடன் வைப்பு கணக்கு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற மட்டத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் வரவு மீதிக்காக வட்டி 3 சதவீதத்திற்கு அண்ணளவான மட்டத்தில் காணப்படுகின்றமை ஏனைய நிதி வைப்புக்களுடன் ஒப்பிடும் போது சாதகமற்றது மற்றும் நிதியத்தின் மீதியினை அதிகரித்துக் கொள்வதற்கு முறையான முறைமையொன்று இல்லாமையினால் நிதியத்தின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்காக திறைச்சேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பணத்தொகை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு வீட்டு கடன் நிதியமொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், இறைவரி சேவையின் நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு சொத்து ஈடு வைத்தலின் அடிப்படையில் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதென மற்றும் பெற்றுக் கொடுக்கப்பட்ட உயர்ந்தபட்ச கடன் தொகை ரூபா 1,000,000 ஆவதுடன் அக் கடன் தொகைக்காக 2011 ஆம் ஆண்டின் பின்னர் உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் விண்ணப்பம் பெறப்பட்டிருக்கவில்லை. | கடன் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 3.1.4 | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு இறைவரி திணைக்களம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுள் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 2023, ஆண்டிற்குரிய இறைவரித் திணைக்களத்தின் அடிப்படை வருமான மதிப்பீடு ரூபா 2,090 ஆன பில்லியன் ஆவதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளவாரான ஈட்டப்பட்ட வருமானமான ரூபா 1,832 பில்லியன் அடிப்படை மதிப்பீட்டின் சதவீதமாக 12 சதவீதம் குறைந்திருந்தது. எவ்வாறாயினுள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக 2023 இன் முதல் காலாண்டிற்காக ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தும் போது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட 96 கிளைகளில் 08 பிரிவுகள் தவிர்த்து எஞ்சிய அனைத்து பிரிவுகளுக்காகவும் 112 சதவீதத்தினை மிகைத்த செயலாற்றல் பெற்றுக் கொள்ளப்பட்டதென கருதி முழுமையான மதிப்பெண்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைந்துக் கொள்வதன் அடிப்படையில் அப் பிரிவுகளுக்காக ஊக்குவிப்பு உரித்தானதெனவும் 8 பிரிவுகளுக்கு அன்றி எஞ்சிய அனைத்து கிளைகளுக்காகவும் உயர்ந்தபட்ச ஊக்குவிப்பு தொகைகள் வழங்கப்பட்டுள்ளது. | ஊக்குவிப்பிற்கான செயலாற்றல் மதிப்பிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தாபிக்கப்படல் வேண்டும். |